


ஆகஸ்ட் 03-2025

# பொதுகாலம் 18 ம் வாரம்-ஞாயிறு

சபை உரையாளர் 1:2, 2:21-23, கொலோசையர் 3:1-5, 9-11, லூக்கா 12:13-21

## சேகரிப்பவராக அல்ல&.! சேமிப்பவராக வாழ்ந்திடுவோம்...!

என் இயேசுவுக்கு பிரியமானவர்களே! ஆண்டின் பொதுக்காலம் 18 ஆம் ஞாயிறு திருவழிபாட்டில் பங்கெடுக்க இறைவன் கொடுத்திருக்கின்ற இந்த வாய்ப்பிற்காக உளமாற நன்றி செலுத்துவோம்.

இன்றைய நற்செய்தியின் அடிப்படையில் சில சிந்தனைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

இரண்டு சொல்லாடல்களைக் கொண்டு உங்களை ஆழமான சிந்தனைக்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றேன்.

1. சேகரிக்கிறவன் 2. சேமிக்கிறவன்.

இந்த இரு சொற்கள் தமிழில் ஒரே மாதிரியாக தோன்றினாலும், உண்மையில் அவற்றின் பொருள் மற்றும் நோக்கம் மாறுபட்டவையாக இருக்கின்றன.

1. சேகரிக்கிறவன் அதாவது COLLECTOR. தேவைக்காக அல்லாமல் எனக்கு இன்னும் வேண்டும் என்று எவ்வளவு இருந்தாலும் மன திருப்தி இல்லாமல் இருப்பவன். இவன் 99 ஊடுருடீ-ல் நிரந்த உறுப்பினராக இருப்பவன்.

இவன் பணத்தை கடவுள் ஆக்குகிறான். பிறர் கவனத்தை ஈர்ப்பதற்காக பிறர்முன் மதிப்பு மிக்கவனாக இருக்க இது உதவும் என்ற தவறான மனநிலை அல்லது தாழ்வு மனப்பான்மை கொண்டவனாக இருப்பவன். தோல்வியாளர்கள் தான் சேகரிக்கிறார்கள்.

2. சேமிக்கிறவன் அதாவது THE SAVER. எதிர்கால நன்மையை கண்முன் கொண்டு தன் அவசிய தேவைகளுக்காகவும், பிறருக்கு உதவுவதற்காகவும் செல்வத்தை சேர்த்து வைப்பவன் பணத்தை கருவியாக பயன்படுத்துகிறவன். வெற்றியாளர்கள் எப்பொழுதும் சேமிப்பவர்களாக இருக்கிறார்கள்.

இந்த பின்னணியில் இன்றைய நற்செய்தி நமக்கு கற்றுத் தரும் பாடங்களை வரிசைப்படுத்த விரும்புகின்றேன்.

1. வாழ்வில் என்றும் சேகரிப்பவனாக அல்ல சேமிப்பவனாக வாழ்ந்திடு.

2. இவ்வுலக செல்வம் விண்ணரசுக்கான முதலீடாக அமைந்தால் அதுவே நற்பயனை தருவதாக இருக்கும்.

3.இறைவனின் பார்வையில் உண்மை செல்வம் எது என்று சிந்திக்க அழைக்கப்படுகிறோம். புனித சின்னப்பர் பிலிப்பியர் 3:8-ல் கூறுவது போல இயேசுவே என் ஒப்பற்ற செல்வம் மற்றதெல்லாம் வெறும் குப்பை என்ற மனநிலையை கொண்டிருப்போம். யோவான் 6:27 'அழிந்து போகும் உணவிற்காக உழைக்க வேண்டாம். அழியாத உணவிற்காக உழையுங்கள்' என்ற இயேசுவின் வார்த்தைகளையும் நினைவு கூர்வோம்.

4.எதற்கு முக்கியத்துவம் தர வேண்டுமோ, அதற்கு முக்கியத்துவம் தர கற்றுக் கொண்டால் எந்த சூழலிலும் நாம் மகிழ்ச்சியாக வாழ முடியும். செல்வம் தேவைதான் ஆனால் அதன் கட்டுப்பாட்டில் நாம் இருந்தால் ஒருபோதும் திருப்தி அடையாதவர்களாக இருப்போம். மாறாக நம் கட்டுப்பாட்டுக்குள் செல்வம் இருந்தால்இ எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

5. மத்தேயு நற்செய்தி 25: 31-46-ல் வாசிப்பது போலஇ இறுதி தீர்ப்பு நாளில் இறைவன் நம்மிடம் கேட்கப் போவது, நீ சேர்த்து வைத்த செல்வங்களைக் கொண்டு எத்தனை பேருக்கு உதவி செய்தாய்? எத்தனை பேருடைய வாழ்வை உயர்த்தினாய்? எத்தனை பேருடைய கண்ணீரைத் துடைத்தாய்? உன் நற்பண்புகள் என்ற செல்வத்தால் பிறரை ஆக்கமாக அல்லது நேர்மறை மனிதர்களாக உருவாக்கினாயா?

6. லூக்கா நற்செய்தி 18: 18-23-ல் நாம் காணும் இளைஞன் செல்வங்கள் மீது தன்னுடைய கண்களைப் பதிய வைத்தவனாக இருந்தானே தவிர இறைவனுடைய பராமரிப்பிலே தன்னுடைய கண்களை பதிய வைக்கவில்லை, ஆனால் அதே நேரத்தில் லூக்கா நற்செய்தி 21: 1-4-ல் ஏழை விதவைப் பெண் இறைவனுடைய பராமரிப்பிலே தன்னுடைய கண்களை முழுமையாக பதிய வைத்தவளாக இருந்ததால் இயேசுவின் பாராட்டை பெற்றார்.

இறுதியாக, இயேசு இல்லாத எதுவும் வீண். வீணிலும் வீண். இயேசுவை மையப்படுத்தாத எதுவும் வீண். வீணிலும் வீண்.

பிறர் நலனுக்காக பயன்படுத்தாத எந்த செல்வமும் - பணம், பொருள், பதவி, அந்தஸ்து, நற்பண்புகள், திறமைகள் - பயன் இல்லாத குப்பையாக அமைந்துவிடும் என்ற சிந்தனையோடு வாழ்வை ஆதாயமாக்குவோம்.

வெளிச் செல்வங்கள் இல்லையே என்று புலம்புவதை விட்டுவிட்டு, நமக்குள் இருக்கும் ஒப்பற்ற செல்வங்களை இனம் கண்டு இறைவனுக்கு நன்றி கூறி வாழ்வை அர்த்தமுள்ளதாக அமைத்து கொள்வோம்.

இறைவன் நம்மை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

